தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 16, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 மார்ச் 30, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளதற்கு. . .

திரு. டி. ஜெயக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, . .

திரு. ஞா. ஜாண் ஜோசப்: இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டில் மீனவர்கள் இறந்தது குறித்து விவாதிக்க வேண்டும்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, . .

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, . .

[2007 மார்ச் 30

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்தும் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. வருகின்ற இரண்டாம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

2. முன்பண மானியக் கோரிக்கைகள், 2007–2008, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007-2008 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவைமுன் வைக்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

2007—2008 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	4,97,16	—	—
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	4,31,99	—	—
3	நீதி நிருவாகம்	56,53,13	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	153,63,78	5,74,90	—
5	வேளாண்மைத் துறை	271,99,08	20,32,23	—